Nallur Branch Library

Subscription.
Inland: Rs. 100/- year
For Advertisement
Apply to:
The Manager,
'The Morning Star,'
182, First Cross Street
JAFFNA.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No. Q / J / 104 / News / 89
Established: 1841: A Christian Weekly: Published Every Friday
Vol:- 150 Jaffna, Friday 09 March 1990 No:- 10
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

News and Articles in Tamil and English. Please send them to
THE EDITOR,
'The Morning Star,'
182, First Cross Street,
JAFFNA.

## Release of Bishop Kulandran's Books

The publication "THE WORD, MEN AND MATTERS" in five volumes being a collection of writings of the first bishop of the Jaffna Diocese of the Church of South India the Rt. Rev. Dr. S. Kulandran was released at a meeting on Monday the 26th February, 1990, at 3.00 p.m. in the Ottley Hall, Jaffna College Vaddukoddai by the Rt. Rev. D.J Ambalavanar, Bishop, Jaffna Diocese of the Church of South India.

The Meeting was chaired by the Rev. Dr. S. Jebanesan, principal, Jaffna College. The meeting started with the prayer by the Rt. Rev. D. J. Ambalavanar which was followed by a song of praise by the students of the Christian Theological Seminary, Chunnakam.

The Chairman in his remarks said that though this work was started eight years ago, it was not possible to release it at an earlier date due to various problems. He also said that the Bishop had written 12 other books earlier and he is our Bishmar and he leads our Community like Bishmar who led his people.

The Bishop has been a minister for 58 years and 23 years as a bishop. Rev. Dr. S. Jebanasan said that bishop Kulandran is our Captain and leader. He further said that the bishop is interested in every thing and has a high sense of humour. He thanked the bishop for his valuable writings and also he urged the bishop to continue to write.

When Bishop Ambalavanar felicitated and released the books, he said that it was a joyous occasion for him to releae the Collection of minor works of Bishop Kulandran and also said that the contents are varied as the title indicates. He said that this is a fine Commentary on contemporary events. Bishop Ambalavanar released the books and presented to the author and afterwards he presented to the principal Jaffna College, and to the Christian Theological Seminary.

Bishop Kulandran in his response said that it was a great experience to go through the printers and that he had much difficulties in finishing his book which was peculiar to Jaffna and particularly peculiar to the present time. He appreciated and thanked the director of the CISRS and other Concerned members with the undertakings of the publication of these Volumes. He gave the books to Bishop Ambalavanar the present Bishop of the diocese.

Dr. S. Jebanesan also said that getting a book through the press in Jaffna is very difficult.

He congratulated Bishop Kulandran for these books and he said that Bishop Kulandran is a wonder in our midst.

Mr. A. Kadirgamar the acting director of the CISRS proposed the vote of thanks. He said that Bishop Kulandran can still write and wished him to continue his writing. He further said that anyone who is interested in the history of Jaffna cannot over look the writings of Bishop Kulandran, and that the Bishop has done so much to the Diocese, the Church and to the community at large.

The meeting came to a close with the prayer and benediction by Bishop Kulandran. Jaffna College entertained the participants with a good Tea.

## News from England.

### A new Tamil Congregation is formed

The third Sunday in January saw the formation of yet another Tamil congregation in London. A Tamil service was held for the first time in St Nicho las Church, Tooting. The Anglican St. Nicholas Church serving a multi ethnic parish Tooting was keen to encourage the formation of a locally based Tamil congregation that would serve the needs of a large Tamil Chirstian gorup based in Tooting and South London. The two services held so far were well attended. A youth committee has already been formed to encourage the full paricipation of younger members in the activities of this Congregation. At present the services will be held monthly but it is hoped to increase the frequency in the future. Rev. John Hall is the pastor in charge while the services themsevles have been led by Rev. Xavier Soosainayagam, formerly a Cathoic priest now serving in the Auglican Church. With this the mumber of Tamil congregations meeting regulary in London is increased to fire.

### L' affaire Rushdie rumbles on.

It is a year now since Ayatollah Khomeini passed a death sentence on the well kuown writer Salman Rushdie for having written 'The Satanic Verses which most muslims found fensive to their beliefs. Since then the Ayatollah himself has passed on ahead, probably to stoke up the fires in anticipation of Rushdie's arrival, while the latter leads a sad and protected life constantly on the run.

Rushdie recently broke his year long silence by writing a seven thousand word essay in one of the Sunday papers entitled - 'In Good Faith'. In this he invited "ordinary, decent, fair-minded Muslims" to reconsider the book in an atmosphere of calm and reason. In it he denied the charge of blasphemy, regretted the harm done to race relations over the past year, and expressed the hope that "the way forward might be found through mutual recognition of mutual pain".

He might as well have not taken the trouble. Whilst some moderate muslim voice did respond to his pleas they were drowned-out by the shouts of the fundamentalists. The current religious leader in Iran stuck his oar in by renewing the call for Rushdie's death. Some Muslims in Britain have alleged that the original 'fatwa' or execution order made by Khomeini was at the request of fundamentalist Muslim leaders in Britain who wanted to make use of the affair to strengthen their leadership in the Muslim community.

This affair has its ironies as well. Rushdie-the anti-racist and life long supporter of the labour party now finds himself in a position where he is grateful to the Tory party while the labour party itself is hopelessly split over the affair.

## WANTED

### Trainee Dispensers

Applications will be received by Mc Leod Hospital, Inuvil f Trainee Dispensers. Selected candidates will be trained by the hospital pharmacist and suitable trainees will be permitted to sit the pharmacist examination conducted by Sri Lanka Medical Council on his recommendation.

Qualifications G.C.E (A/L) with at least three subjects including Chemistry and English as subjects in G.C.E (O/L).

Apply to Medical Superintendent.

### A Vacancy Exists for a Chart Clerk

Candidates should have passed the G.C.E (O/L) in six subjects and preferably with credit passes in English and Maths. Female applicants will be preferred.

Apply to Medical Superintendent.

### A Vacancy Exists for an office Peon

Applicant should have passed at least the G.C.E (O/L) examination. A working knowledge of English is essential.

Apply to Medical Superintendent
**Mc Leod Hospital, Inuvil.**

### Selling God - ten posters seen outside Churches.

Fight truth decay - brush up your Bible every day!
Come to Ch--Ch! What is missing?
Jog to Church and keep spiritually fit!
Bank on God for a higher rate of interest!
Its impossible to lose your footing on your knees.
The Good Book has more chapters than the bad box has channells.
Sing a hymn to Him!
Danger! Live Church!
I wonder how many of our churches aspire to the last one?

# உதய தாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841

மலர் 150 | 09 - 03 - 1990 | இதழ் 10

## செய்திகள்.

### அங்குரார்ப்பண வைபவம்:

காரைநகர்த் தென்னிந்திய திருச்சபைக்கான பகல் பராமரிப்பு நிலையத்தை காரைநகர்ச் சவுக்கு மரத்திடல் மண்டபத்தில் 05.03.90 திங்கள் மாலை 4.30 மணிக்கு யாழ்.தென்னிந்திய திருமண்டலத்தின் செயலர் அருள்திரு. அ.ஜெயக்குமாரன் அவர்கள் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். 3 வயது முதல் பாடசாலை செல்லும் வரை உள்ள பிள்ளைகள் இப் பகல் பராமரிப்பு நிலையத்தில் சேரலாம் என்றும், யாழ்.ஆதீனத்தில் பேராயர் அவர்கள் வருகை தர முடியவில்லை என்றும், இந்நிலையத்தை நான் திறந்து வைப்பதில் பெருமை அடைகிறேன் என்றும் அருள்திரு. A. ஜெயக்குமார் தனது தலைமை உரையில் தெரிவித்தார்.

35 பிள்ளைகள் உள்ள இப் பகல் பராமரிப்பு நிலையம் சமுகத்திற்கு ஒரு ஒளியாக இருக்கிறதென்றும், கல்வி வளர்ச்சி ஆசிரியர்களிலோ, மாணவர்களிலேயோ மட்டும் தங்கி இல்லை என்றும், இது அவர் அவர் பெற்றோரிலும் தங்கி இருக்கிறது என்றும் பிள்ளைகளை பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்புவதே அவர்களின் தலையாய கடமை என்றும் ஆசிரியர் S.துரைராஜா அவர்கள் தனது உரையில் தெரிவித்தார். மேலும் அவர் தனது உரையில் கிறிஸ்தவ சேவை எங்கு தேவைகளுள்ளதோ அங்கு செயற்படும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும் என்று குறிப்பிட்டார்.

யாழ்.தென்னிந்திய திருமண்டலத்தின் 53 ஆவது பகல் பராமரிப்பு நிலையம் இது என்றும் இதனைத் திறம்பட நடத்துவது காரைநகர்த் திருச்சபையின் கடமை என்றும் காரைநகர்த் திருச்சபையின் சபாசங்கப் பிரதிநிதியாகிய திரு. V. அற்புதஜெயம் அவர்கள் தெரிவித்தார்.

கொத்தணி அதிபர் திரு.T டானியேல் அவர்கள் பேசுகையில் இயேசு எவ்வாறு கடற்கரையில் சரையோரங்களிற்குத் தமது சேவைகளைச் செய்தாரோ அதேபோல 2000 வருடங்களிற்குப் பின் யாழ் ஆதீனமும் இன்று கரையோர மக்களிற்குத் தமது சேவைகளைச் செய்ய முன்வந்துள்ளதென்றும் சமயத்தை மக்களிடையே திணிப்பது ஆதீனத்தின் நோக்கமல்லவென்றும் சகல மதத்தினருக்கும் பாரபட்சம் இல்லாமல் தேவையைப் பொறுத்து சேவை செய்வதே உண்மையான நோக்கம் என்றும் அவர் தெட்டத்தெளிவாக விளக்கிக் கூறினார். இவ்விழாவில் 300க்கும் அதிகமான மக்கள் வருகை தந்தனர். வருகை தந்த அனைவருக்கும் தேநீர் உபசரணை நடத்தப்பட்டது. அதன்பின் ஆசிரியர்களிடம் பொறுப்பு கையளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து காரியதரிசியின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவுபெற்றது.

### மரணம்:

**திருமதி. ம. தேவசகாயம்.**

திருமதி.மனோன்மணி தேவசகாயம் ஏழாலை தெற்கு தென் இந்திய திருச்சபை அங்கத்தவர் 28.02.90 புதன்கிழமை மானிப்பாயில் இறைவனடி சேர்ந்தார். இவர் ஓய்வு பெற்ற ஆசிரியையும், நுனாவிலைச் சேர்ந்த வைத்திய கலாநிதி தம்பையா தேவசகாயத்தின் அன்பு மனைவியும், தேவமனோகரி, தேவரஞ்சினி (கனடா தேவபாலன் (மாலைதீவு) அருள் திரு.தேவநேசன் (தெ.இ.தி.மானிப்பாய்) ஆகியோரின் அன்புத்தாயாரும் இளைப்பாறிய தலைமை ஆசிரியர் J.N.விஜயரத்தினத்தின் அன்புச் சகோதரியும் அருள்திரு.S.C. ஆனல்ட் (தெ. இ. தி. வரணி), T.யோகேஸ்வரன்(கனடா),ஷாமினி தேவபாலன் (மாலைதீவு), சுநேத்திரா தேவநேசன் (ஆசிரியை st. தெரேசா மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஷாமினி, ஷாலினி, டிலானி, சிஒ, சுஜீவ் ஆகியோரின் அன்புப்பேத்தியுமாவார். இவரது இறுதி ஆராதனை ஏழாலை தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் 03.03.90 சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு அருள்திரு. D. R. அம்பலவாணர் தலைமையில் நடைபெற்றது. அருள் திரு. A. V. இயேசுதாசன் இரங்கலுரையை வழங்க, அருள்திரு. D.தியாகராஜா அருளுரையை நிகழ்த்தினார். கல்லறைத் தோட்ட ஆராதனை அருள் திரு. T. தேவநேசன், நடத்தினார்கள்.

### நன்றி செலுத்தும் ஆராதனை

காலம் சென்ற திருவாளர் சாமுவல் குணநாயகம் திருமதி. நல்லம்மா குணநாயகம் அவர்களின் நன்றி செலுத்தும் ஆராதனை 18-ம் திகதி மாசி மாதம் (18.02 90) 3.00 மணிக்கு காரைநகர் தெ இ திருச்சபையில் அருள் திரு.A.V.இயேசுதாசன் தலைமையில் நடைபெற்றது. அருள்திரு. N.கதிரவேலு அவர்கள் இரங்கல் உரை நிகழ்த்த திருவாளர் G.இராஜநாயகம் அவர்கள் அருள் உரையை நிகழ்த்தினார். இவர்களது ஞாபக கல்லும் திரைநீக்கம் செய்யப்பட்டது. ஆராதனையின் பின்னர் வருகை தந்தோர் அனைவருக்கும் தேநீர் உபசரணை நடைபெற்றது.

### பாடுகளின் நாட்கள்.

28 - 2 - 90 8 - 4 - 90

28.02.90 புதன்கிழமையை உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் சாம்பல் புதனை (விபூதித் திருநாள்) அனுஷ்டிக்கிறார்கள். ''மண்ணில் தோன்றும் மனித வாழ்வு மண்ணிலே முடிவு அடைகிறது''. என்ற தத்துவத்தை இத்திருநாள் குறிக்கிறது. இன்று தொடக்கம் அடுத்து வரும் 40 நாட்களும் பாடுகளின் நாள் ஆகும்.

## இவர் யார்?

பரிசுத்த வார நிகழ்ச்சியின் முதல் நாளிலே, இயேசு பெருமான் எருசலேம் நகருக்குப் பவனியாகப் போன வேளையிலே 'இவர் யார்?' (மத். 21:10) என்ற இந்த வினா எழுந்துள்ளதை நாம் அறிவோம். இப்புனித வாரத்தில் எம்பெருமானைப் பற்றிக் கூறப்பட்டவைகளைக் கொண்டே தியானிப்போம்.

### 1. தாவீதின் குமாரன்:

குருத்தோலை ஞாயிறு (மத் 21:9) 'தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா!'- மன்னன் தாவீதின் வம்ச வழியில் தோன்றிய இயேசு முள்முடி பூண்ட மன்னாதிமன்னன் ஆவார். தாவீது இறைவனின் தாசனாக அழைக்கப்பட்டார். இயேசுபிரான் நமக்காகப் பாடுபட அனுப்பப்பட்ட இறைவனின் தாசன். தாவீது வீராதி வீரனாக விளங்கினார். சிங்கம், கரடியுடன் போராடியதுடன், கோலியாத்தையும் கொன்ற வீரன். இயேசு சாத்தானின் செயல்களை வென்ற மாவீரன். மரணத்தை வென்ற வெற்றி வேந்தன்.

### 2. வாக்கு வல்லவர்:

திங்கள் (மத். 21:19-20) அத்தி மரத்தை நோக்கி இவர் உரைத்த வாக்கு அத்தனை விரைவில் நிறைவேறியதைக் கண்ணுற்ற மக்கள், ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். அவர் சொல்ல ஆகும். அவர் கட்டளையிட நிற்கும். அவர் உன்னிடம் பசியோடு வருகிறார். 'நான் ஒரு கனியற்ற பாழ்மரமல்லவோ?' என முடிவு பரியந்தம் கூறிக்கொண்டிருப்பாயோ?

### 3. சத்தியமுள்ளவர்:

செவ்வாய் (மத். 22:16) அவரில் சொற்குற்றங் காண சொற்போர் நடத்திய பகைவரிடையே ஞானமாய்ப் பதிலளித்தார். அவரைச் சோதிக்கத் துணிந்தவன் அவரைச் 'சத்தியமுள்ளவர்' என அழைத்தான். ஆனால், அவன் அவர் கூறிய சத்தியத்திற்குச் செவிமடுக்கவில்லை. அவர் பரிசுத்தர், நல்லவர், இரட்சகர், ஜீவிக்கிறார் எனக் கூறிக்கொள்ளும் சகோதரனே நீ கூறுவது வார்த்தையளவிலா, வாழ்க்கையிலா என்பதைச் சற்றே சிந்தித்துப்பார்.

### 4. அபிஷேக நாதர்:

புதன் (மத். 26:7) அவர் பாவிகளான மக்களால் அபிஷேகம் பண்ணப்படத் தம்மை ஒப்புக் கொடுத்தார். ஆனால், அது யூதாவுக்கு பகட்டாகவும் வீணாகவுமே விளங்கியது. அவரோ அதைத் தமக்கு மகிமையாக எடுத்துக் கொள்ளாது தாம் பாடுபடுவதற்காகவே அபிஷேகம் பண்ணப்பட்டதை எண்ணினார் கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பும் சகோதரனே, உன் சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப் பின்பற்றி நற்சந்தமாய்த் துவங்குவாயாக.

### 5 பஸ்காவாகிய கிறிஸ்து:

வியாழன (மத். 26:26-28) பஸ்காவை ஆதரிப்பதில் கவனமாயிருந்தவர், தமது மாமிசத்தைப் புசிப்பதற்காகவும், தம் இரத்தத்தைப் பானம் பண்ணுவதற்காகவும் தந்து; தாமே பஸ்கா ஆட்டுக்குட்டி என்பதை வெளிப்படுத்தினார். அன்று சிலுவையில் பலியாவதற்கு முன் தம் அடியவருடன் அவர் பங்கு பெற்றார். அவர் பலியான பின்பு இன்று அவரில் பங்கு பெறுகின்றோம். அவரில் பங்கு பெற்றும் அவரைக் காட்டிக் கொடுக்கும் ஆளாகவா அல்லது அவருடன் நிலைத்துவாழும் ஆளாகவா நீ இருக்கிறாய்?

### 6. கலிலேயனாகிய இயேசு:

வெள்ளி (மத். 26:69) கலிலேய மக்கள் சுத்தமான எபிரேயர் அல்லர் என்றும் நாகரீகமற்றவர் என்றும் யூத மக்களால் அற்பமாய்க் கருதப்பட்டனர். கலிலேயருக்கும் மற்ற யூதருக்கும் பேச்சில் கூட வித்தியாசம் காணப்பட்டது. அக் கலிலேயா நாட்டில் இயேசு பாலியப்பருவத்தைக் கழித்தாலும், இவரது ஊழியத்தில் பெரும்பகுதி அங்கே நடைபெற்றாலும் அற்பமாய் எண்ணப்பட்ட இவர் அற்புதமானவரல்லவா? கலிலேயனாகிய இயேசுவைப் பின்பற்றி நட.

### 7. நசரேயனாகிய இயேசு: (மத். 26;71)

நசரேயன் என்றால் பிரிக்கப்பட்டவன் என்பது பொருள். சகல அசுத்தத்தினின்றும் பிரிக்கப்பட்டு தேவ கட்டளையை நிறைவேற்றும்படி நியமிக்கப்பட்டவனே நசரேயன். சிலுவையின் மரணபரியந்தம் தம்மை இயேசுபிரான் கீழ்ப்படுத்தினார்.

### 8. அவர் மனிதன்: (மத். 26:72, 74)

இறைவனின் மைந்தன் சாதாரண மனிதனாக மதிக்கப்படுகின்றார். மகிமையுள்ளவர் மகிமையற்றவராகவும், நித்தியமானவர் சாவுக்குரிய மண்ணான மனிதனாகவும் மதிக்கப்படுகின்றார். சர்வ வல்லவர், பெலவீனமான மனிதனாகத் தோன்றலானார். இது பேரன்பின் வரம்பு.

### 9. அவரோ நீதிமான்: (மத். 27:19, 24)

மனிதனாக மதிக்கப்பட்ட அவர் நீதிமானாகச் சுட்டிக் காட்டப்பட்டார். அரண்மனைக்கு வெளியே மக்கள் இடும் கூக்குரலுக்கு இடையில் 'அவரோ நீதிமான்' என்ற வாசகம் அரண்மனையினுள்ளிருந்து அமைதியாக வந்தது. பாவியான பரபாசுக்கு விடுதலையளிக்க, நீதிபரனாகிய இயேசுவை மக்கள்திரள பலியாக்கிற்று.

### 10. அவர் இராஜா (மத். 27:29, 37)-

'யூதருடைய இராஜாவே வாழ்க' என கையில் நாணற் குச்சியைக் கொடுத்து, சிவப்பு அங்கியை உடுத்தி, முள்முடி சூட்டி, சூழ நின்று வணங்கி பரியாசம் செய்தது ஒரு நிந்தைக் காட்சியே. ஆனால், மூன்று ஆணிகளில் இரத்தக் கோர்வையாய்ப் பாடு அனுபவிக்கும் சிலுவையின் சிகரத்தில் 'இவன் யூதருடைய் இராஜாவாகிய இயேசு' என்ற வாசகம் தொங்க விடப்பட்டது.

### 11. இறைவனின் மைந்தன்: (மத். 27:54)

இயேசுவின் பாடுகளைக் கண்ணுற்ற யூதனல்லாத புறசாதியான நூற்றுக்கதிபதியும், 'மெய்யாகவே இவர் கடவுளுடைய குமாரன்' என்றனர். அவரைச் சாதாரண மனிதனாகவோ, நீதிமானாகவோ, இராஜாவாகவோ காணாது, அவரைத் இறைமைந்தனாகக் கண்டு அறிக்கையிட்டனர்.

### 12. அமைதியுற்ற இயேசு:

சனி கொந்தளிக்கும் கடலில், படகிலே அமைதியாய் அயர்ந்து நித்திரையில் ஆழ்ந்திருந்தவர். 'அவன் மரிக்கவில்லை நித்திரையாயிருக்கிறான்' என்று யவீரிடம் கூறினவர், கல்லறையிலிருந்து வெளியே வரும்படி மரித்துப்போன இலாசருவிடம் பேசினவர். அமைதியாய் கல்லறைக்குள் அடங்கியிருந்தார் ஏன்?

### 13. உயிர்த்த இயேசு:

ஞாயிறு (மத். 28:6) அவர் உயிர்த்தெழுந்தார். உயிரோடிருக்கிறவரை மரித்தோரிடத்தில் தேடிப் பயனில்லை. இன்று உயிருள்ள இயேசுவை உலகிற்குக் காண்பிக்க வேண்டும். அடக்கம் பண்ணப்பட்ட காலியான இடத்தை உலகம் காண விரும்புகிறது. 'இயேசு ஜீவிக்கிறார்!' எனப் பறைசாற்றும் கிறிஸ்தவ சமுதாயமே. அதை உனது வார்த்தையிலல்ல வாழ்க்கையில் காண்பிப்பாயா?

## தாரகை ஒளி:

துன்மார்க்கன் தன்முகம் கடினப் படுத்துவான்;
செம்மையோர் தம்வழி நேர்மைப் படுத்துவர்.

— நீதிமொழிகள்- 21: 28 —

# எங்கள் கருத்து

## பிறர் குற்றங்களை மன்னித்தல்.

தமிழர்கள் எந்த நிலைமையில் இருந்தாலும், தமக்கு விரோதமாகத் தீங்கிளைப்போரை மன்னித்தாலும் மன்னிக்காவிட்டாலும், அவர்கள் துன்புறுத்தப்படுவார்கள், கொல்லப்படுவார்கள் என்ற நியதிதான் இதுவரை நடைமுறையில் இருந்து வந்தது. எதிர்த்துப் போராட ஆற்றலற்ற பெரும்பாலான தமிழர்கள், தம்மைத் துன்புறுத்துவோரை மன்னித்துக்கொண்டே செத்து மடிந்தார்கள். 'இறைவா, இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்' என்பதுதான் அவர்களின் உள்ளக் குமுறலாயிருந்தது. இதற்காக அவர்கள் சிந்திய இரத்தம், செய்த வேண்டுதல் வீணாகவில்லை. பலன் வந்துகொண்டேயிருக்கிறது. நாம் எதிர்பார்க்கும் 'சமாதானம்', இரத்தம் கலந்த மன்னிப்பிலிருந்து வரும் என்பதே எமது உறுதியான நம்பிக்கை.

ஒரு மனிதன் பாவியாவது மட்டுமல்ல, அவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவர்களும் உண்டு. ஒரு மனிதனின் அடிப்படை உண்மை அவன் ஒரு பாவி. அவனுக்கு விரோதமாகப் பாவம் செய்யப்படுகிறது. ஒருவன் தானே பாவம் செய்வதுபோலவே, பிறர் பாவத்திற்கும் ஆளாகிறான். மனிதனுக்கு விரோதமாகப் பாவம் செய்யும் சக்திகளை அழிக்க முயல்வதில் பயனில்லை. அழிக்க, அழிக்க அது வளர்ந்து கொண்டேயிருக்கும். ஆகவே, நாம் செய்ய வேண்டியது, இந்த சக்திகளை தெளிவாகக் கண்டு, அவற்றுடன் நமது தொடர்பைப் புரிந்துகொண்டு, இச்சக்திகளினூடே நமது சொந்தப் பாவத்தன்மையையும் புரிந்து கொள்ளும்போது, நமக்கு விரோதமாக குற்றஞ்செய்வோருக்காக, மன்னிப்புடன் மன்றாட ஏவப்படுவோம்.

நமக்கு விரோதமாகப் பாவஞ்செய்வோர்களை நாம் உற்று நோக்கும்போது ஒரு சமுதாயத்தையே கண்டுணர்கிறோம். அச்சமுதாயம் பிறர்பாவத்திற்கு ஆளானவர்கள் என்ற அடிப்படையில் கிறிஸ்துவுக்குட்படாதவர்களையும் இனம் கண்டு ஏற்றுக் கொள்கிறது. அத்துடன் மனிதனுக்கு விரோதமாகத் தீங்குசெய்யும் சக்திக்கு எதிரான பொதுப் போராட்டத்தில், தமது சொந்தப் பாவத்தன்மைக்காகப் போராடுவதில் ஈடுபடுகிறவர்களையும் சந்திக்கிறது. கடவுள் அருளும் மன்னிப்பையும், கிறிஸ்தவ ஒருமைப்பாட்டையும் அவர்களோடு சேர்ந்து அனுபவிக்கிறது.

நமக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தவர்கள் பால் நாம் வெறுப்பு கொள்ளப்படாது, கசப்பு மனப்பான்மையுடன் இருக்கப்படாது, அவர்களை மனமார மன்னித்து, அவர்களுக்காக இறைவனிடம் மன்றாட வேண்டும். அப்பொழுதுதான் நமது மனமும் சுத்தமாகும். மற்றவர்களை மன்னிக்கத்தக்க நல்மனத்தை நாம் பெறுவோம். தமக்கு விரோதமாகத் தீங்கிழைத்தோரை மன்னித்து, மன்னிக்கும்படி இறைவனை மன்றாடியபடியினாற்றான், தன் அருகில் இருந்த கள்வனை மன்னிக்கத்தக்க நிலையை அவர் அடைந்தார்.

கிறிஸ்து பெருமான் படைப்பின் மாபெரும் விசைகளையும், அதிகாரங்களையும், சக்திகளையும் மேற்கொண்டார். விடுதலை பெற்ற மனிதர் அவரே. நமது சமுதாயத்தை அடிமைத்தனத்திலும், பயத்திலும் கட்டுப்படுத்தி வைத்திருந்த தீயோனின் சக்திகளாயிருந்தாலும், இன்றும் தனது கட்டுக்குள் மனிதர்களை வைத்திருக்கும் மரணம், குற்ற உணர்வு, தீர்ப்பைப் பற்றிய பயம் ஆகிய சக்திகளாயிருந்தாலும் நாம் இனிமேல் இவற்றிற்குப் பயப்படத்தேவையில்லை. சமயத்தை ஒதுக்குவோர், அரசியல் சர்வாதிகாரம் போன்ற சக்திகளுக்கோ, அல்லது வேறெந்த அச்சுறுத்தும் சக்திக்கோ நாம் பயப்படத் தேவையில்லை.

இன்று நமது மக்கள் 'பயத்தினால்' தான் பீடிக்கப்பட்டு அடங்கி ஒதுங்கி நிற்கின்றனர். இது ஒரு சமுதாய வாழ்வுக்கு உகந்ததல்ல. பயமும் ஆழ்ந்த கவலையும் நமது உடலையே உருக்கிவிடும். பாவமும், குற்ற உணர்வும் நம்மைச் செயலற்றவர்களாக்கி, தலை கவிழ வைக்கும்.

## வாழ்க்கையில் ஓர் புதிய பாதையினை மேற்கொள்ளுவதற்குரிய வழிவகைகள்.

1 உங்களது இயல்பான திறமைகளை மீள ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள்.

'என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு'

i) உங்களது தேவைகளை அறிந்து கொள்ளுங்கள்.
ii) உங்களைப் புரிந்து கொள்ளுங்கள்.
iii) கூடிய இயலூக்கத்துடன் செயல்படுங்கள்.

2 வெற்றியின் இரகசியத்தை விளங்கிக் கொள்ளுங்கள்.

'ஜீவ மார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உமது சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.

i) உங்களால் இயன்றவரை திறமையாகச் செயல்ப்படுங்கள்.
ii) நேர்மையான இலக்குகளை உருவாக்குங்கள்.
iii) தேவனிடம் உங்களை அர்ப்பணியுங்கள்.

3 சந்தர்ப்பங்களைத் தேடுங்கள்.

'முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கொடுக்கப்படும்' மத். 6:33

i) உங்களது உள்ளத்தைத் திறந்து கொள்ளுங்கள்.
ii) உங்களது ஆளுமையினை விருத்தி செய்யுங்கள்.
iii) உங்களை ஒழுக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.

4 மறவுங்கள், மன்னியுங்கள், வாழுங்கள்.

'பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தையப் பொருளுக்கான இலக்கை நோக்கித் தொடருகிறேன்'

i) பழையதை மறவுங்கள்.
ii) உங்களையும் பிறரையும் மன்னித்து விடுங்கள்.
iii) அன்றாட வாழ்க்கையை நிறைவாக வாழுங்கள்.

5 'நன்மையில் நம்பிக்கை வையுங்கள்'

கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது.

i) நன்மை செய்யும் வாய்ப்புக்களைத் தவறவிடாதீர்கள்.
ii) உங்களது 'சுயநன்மை'யினை மட்டுமே கருதும் சுபாவத்தினை. கைவிடுங்கள்.
iii) ஆரோக்கியமானவற்றைச் சிந்தியுங்கள்.

6 ஜெபத்தின் சக்தியைப் பயன்படுத்துங்கள்.

'நீங்கள் ஜெபம் பண்ணும் பொழுது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்' —மாற்கு 11:24

i) உரையாடுங்கள், கற்பனை பண்ணுங்கள், செவிசாயுங்கள்.
ii) எல்லாத் தடைகளையும் நீக்குங்கள்.
iii) அதிசயங்கள் உங்கள் வாழ்க்கையில் நிகழும் என்பதை விசுவாசியுங்கள்.

(நோமன் வின்சன் பீலின் நூலில் இருந்து சேகரிக்கப்பட்டவை)

—ஜே.ஜே.அற்புதராஜா.


## கிறிஸ்தவ இறையியல் கல்லூரி சுன்னாகம்.

கிறிஸ்தவ இறையியல் பட்டதாரி 'டிப்ளோமா' வகுப்புகளில் சேர்வதற்கும், செரம்பூர் பல்கலைக்கழக B. Th. வகுப்புகளில் சேர்வதற்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

குறைந்த பட்சம் GCE. (O/L) ல் ஆறு பாடங்கள் சித்தியடைந்தவர்கள் 'டிப்ளோமா' பயிற்சி நெறியை பின்பற்றுவதற்கு விண்ணப்பிக்கலாம். செரம்பூர் பல்கலைக்கழக B. Th. பயிற்சிநெறியைப் பின்பற்ற குறைந்தபட்சம் GCE. (A/L) இல் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

மற்றைய விபரங்களும், விண்ணப்பப் பத்திரங்களும் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 31. 03. 1990

ஏ. கதிர்காமர்,
பதிவாளர்

கிறிஸ்தவ இறையியல் கல்லூரி,
சுன்னாகம்.


இவ்வாறு நமது சமுதாயம் ஆழ்ந்த கவலையில் மூழ்கியிருக்கும் போதுதான், கிறிஸ்து பெருமான் ஒரு உறுதிப்பாட்டுடன் நம்மைத் தொடுகிறார் — 'உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டன' என்கிறார்.

"எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் மன்னித்திருக்கிறதுபோல நாங்கள் செய்த தீமைகளை எங்களுக்கு மன்னித்தருளும்"

**Editorial**

## The Changing Jaffna Scene

Tons of tranquility has characterised life in Jaffna since mid February, 1990 when the IPKF commenced their re - induction process, on President Premadasa commencing a dialogue with the LTTE and coming to an understanding with New Delhi over the final deadline for the withdrawal of the Indian Peace Keeping Force in the North and East of the Country. The deadline is 31st of March 1990

The dismantling of the bunkers, the handing over of their tenancy of civilian houses, the tempering of their miltance with a strong dose of pragmatism and the packing of their belongings without undue ceremony from areas which they had 'held' for well over two years were accomplished by the IPKF in quicker time than the people anticipated Simmering disputes of local factions did not emerge as doomsday prophets predicted, leaving a sombre trail.

Battle scars do remain in town and village areas and in some places- a bewildering hodge-podge of dilapidated buildings and toppled walls. But the atmosphere in the north is no longer tense.

Teams of householders buoyantly attemptiug to rebuild their hearths and homes and re-demarcate their boundaries, amnestied political prisoners arriving from jails, long term detenues released from detention centres, and above all inveterate enemies ceasing their rounds of sniper fire, have been scenes in Jaffna whice have certainly constituted a euphoric phase in its dismal antals of three lacerating years 1987 - 1990.

The dominant image which all teen - age children in Jaffna have had of their native country is of armed people in camps or moving in vehicles, of shells exploding and killing or maiming innocents for life, of 'Checks' and arrests of civilian population, of parents waiting in clusters at gates of detention centres, of schools closed indefinitely and of "choppers" ever gaining momentum through steep banks of cumulous clouds over the country-side or spiralling down on an improvised heli - pad on the village pasture - land. The total picture has been one of war and devastation as a normal adjunct of life.

But most parts of the Jaffna Peninsula are now returning to normal condition - No crude road blocks or barriers litter the streets. No schools close early because of tension in the village. No curfew is proclaimed covering any part of the peninsula. No dogs bark through the day and no one calls for your Identity card at any point or in any place and above all, there are no sounds of war midst the Peace.

The real problems, we know, are yet to be faced. But like the ancient Jew, the Jaffna man is "a melancholy optimist" He sheds tears over a tragic past but never loses his faith in a triumphant future.

Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. Q/J/104/89 News
Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press. 182,1st,Cross Street Jaffna on Friday, 23 Fubruary. 1990 and bublished bythe Rev. T. THEVANESAN,182,First Cross Street, Jaffna

( Continued From Last Issue )

### An Extract from the Prize Day Address Deliverd by the Chief Guest Dr. Devanesan Nesiah at the Chundikuli Girls' College Prize - Giving

Secondly, job - satisfaction and opportunities to make a significant contribution to public welfare may be found as much outside as within the elite prefessions. Mahathma Gandhi was eminently qualified to be a successful barrister. He got far more job - satisfaction and made an incomparably greater contribution to society by abandoning that career for unpaid political and community service. Many of the missionaries including several who served in this district were well equipped for distinguished professional careers in their own country. They gained, and we all gained, because they chose instead to engage in even more valuable, and demanding, but virtually unpaid, service in land far distant from their place of birth. Subramania Barathi with the advantages of Brahmin birth and exceptional intellcctual and literary skills, could have found a place at the apex of Indian society He preferred to align himself in his lifestyle and the content of his poetry with the poor and oppressed of that subcontinent: our civilization is much richer on that account.

It is not only people of the stature of Mahatma Gandhi, Subramania Barathi, Florence Nightingale, Vinobha Bhave, Albert Schweitzer and Mother Theresa who can gain job - satisfaction through deviating from lucrative traditional profssesional career tasks. If we look around we can see many men and women at every social level who greatly contribute to the happiness of others and gain much job - satisfaction in doing so. You may find such people both in your school and outside in many walks of life. They may be teachers, clerks, minor employees, nurses attendants, shop - keepers, sales - persons, bus drivers, conductors, government servants, municipal employees, voluntary workers in non - governmental organizations or neighbours not all of whom may have regular employment. Creative energy, high motivation to help others and satisfaction in doing one's duty well are needed and are to be found in all sectors and at all levels. To the extent that a society places excessive emphasis on gaining high academic qualifications, entering the elite professions and enjoying economio affuence in assessing the worth of its members, it contributes to the frustration of the majority who may have other goals or who fail to reach the targets set by that community. That population also fails to make the best use of its human resources. Perhaps we can trace back much of the ills of our society to the false values to which we have all - contributed.

Perhaps among you there are many who aspire to be social and community workers, whether full time or Part time. Perhaps large numbers among you will opt to work with women's groups, with the physically, mentally or socially handicapped and with the poor. I trust that whatever your social status may be in the years to come, you will engage in combating class and caste prejudices, ignorance, corruption, poverty,t violence and other social evils, and champion human rights. Let us hope that the stature of this school will grow not only through producing the social elite but also through inspiring, motivating and equipping girls to transform our society. Any school can Produce pupils who aspire to join the elite professions and move up the social ladder. Not all schools inspire students with higher motivation. I trust that Chundikuli will provide such inspiration and that it is those so motivated who will lead the way forward to our future.

---

**Christian Theological Seminary and Institute For Lay People**

SEMINAR : Conference of the Commission on world Mission and Eveanglism - San Antonio, Texas, USA.

"YOUR WILL BE DONE, MISSION IN CHRIST'S WAY"

LEADER : Mrs. Daya Thiagarajah - Sri Lankan delegate to the conference.

VENUE : Periannan Hall, Christa Seva Ashram Chunnakam.

DATE : 17th March (Saturday), 1990 at 9.00 a.m.

You are Cordially invitted

Kadirgamar
Registrar